திரு. கே. பி. ராஜு: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, புரட்சித்தலைவி அவர்களுடைய பெயரால் இயங்கிவருகிற பேருந்துகளின் இயக்கம், அண்டை மாநிலங்களான ஆந்திரா, பம்பாய், டெல்லி போன்ற இடங்களுக்கும் விஸ்தரிக்கப்படுமா? அதேபோல், ஜப்பானில் இருக்கிற ....(மணியடிக்கப்பெற்றது)

மாண்புமிகு பேரவைத் தலைவர்: ஆந்திரா, அண்டை மாநிலம் சரி; பம்பாய், டெல்லி போன்றவைகள் எல்லாம் அண்டை மாநிலங்கள் அல்ல; ரொம்ப தூரத்திலே இருக்கக்கூடிய மாநிலங்கள்.

திரு. கே. பி. ராஜு: அவை இந்தியா முழுவதும் விஸ்தரிக்கப்படுமா? அதேபோல், புரட்சித்தலைவியினுடைய பெயரால் இயங்குகின்ற அந்தப் பேருந்துகள், ஜப்பானில் இருக்கிற குளுகுளு பேருந்துகளைப் போல ஆக்கப்படுமா என்பதை அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. கே. ஏ. செங்கோட்டையன்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, ஒருவார காலத்தில், நீங்கள் நினைப்பதுபோல, குளுகுளு பேருந்துகள் இங்கே தமிழகத்தில் விடப்படும். ஏழை எளிய மக்களும், இந்தக் குளுகுளு பேருந்திலே செல்வதற்காக, போக்குவரத்துத் துறை நடவடிக்கை மேற்கொண்டிருக்கிறது என்பதைத் தெரிவித்துக் கொள்கிறேன். (மேசையைத் தட்டும் ஒலி) மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் குறிப்பிடுகிறபோது, பம்பாய் வரையிலும் செல்லுமா என்று கேட்டார்கள். பம்பாய் வரையிலும் விமானம் இருக்கிறது; ரெயிலும் இருக்கிறது. ஆகவே இந்தப் போக்குவரத்துத் துறையைப் பொறுத்தவரையில், தென் மாநிலங்களாக இருக்கிற கர்னாடகா, ஆந்திரா, கேரளா, பாண்டிச்சேரி போன்ற மாநிலங்களுக்கு இயக்க நாங்கள் நடவடிக்கை மேற்கொண்டிருக்கிறோம்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: வினா எண் 127, திருமதி ரெ.சியாமளா, இருக்கையில் இல்லை, அவருக்குப் பதிலாக திருமதி என். கனகவல்லி கேட்கிறார். மாண்புமிகு கைத்தறித் துறை அமைச்சர்.

127 —

எட்டையபுரத்தில் நெசவாளர்களுக்கு வீடுகள் கட்டி வழங்குதல்.

***10315*—திருமதி ரெ. சியாமளா:**

மாண்புமிகு கைத்தறித் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) எட்டையபுரத்தில் நெசவாளர்களுக்குக் கட்டித்தரும் வீடுகள் பாதி கட்டப்பட்ட நிலையிலேயே வழங்கப்படுவதை அரசு அறியுமா?

(ஆ) ஆம் எனில், அவர்களுக்கு முழுமையான வீடுகள் கட்டித்தர அரசு நடவடிக்கை எடுக்குமா?

1994 மார்ச் 29]

மாண்புமிகு திரு. இ. மதுசூதனன், கைத்தறித் துறை அமைச்சர்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,

(அ) எட்டையபுரத்தில் கைத்தறி நெசவாளர்கட்கு கட்டித்தரும் வீடுகள் பாதி கட்டப்பட்ட நிலையிலேயே வழங்கப்படவில்லை.

(ஆ) முழுமையாக வீடுகள் கட்டித்தர நடவடிக்கை எடுக்கப்பட்டு வருகிறது.

முற்பகல் 10-35

திருமதி என். கனகவல்லி: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, நலிவடைந்துள்ள நெசவாளர்களின் வாழ்க்கைத்தரத்தை உயர்த்துவதற்கு, புரட்சித் தலைவி அவர்கள் நூல் விலையை உயர்த்தியுள்ள இந்த நல்லாட்சியில் எட்டையபுரத்தில் அமைக்கப்பட்டுள்ள நெசவாளர்கள் காலனியில் மேற்கூரைகள் பழுதடைந்து, செல்லரித்துப் போய்விட்டதால் சில வீடுகளின் மேற்கூரைகள் விழுந்துவிட்டன. அதை மாவட்ட ஆட்சித் தலைவரும், சம்பந்தப்பட்ட அமைச்சரும், திட்ட அலுவலரும் நேரிடையாகப் பார்வையிட்டு உடனடியாகச் செய்து தரப்படும் என்று கூறியும் இதுவரை எந்தவித நடவடிக்கையும் எடுக்கப்படவில்லை என்பதால் விரைவாக அவை மாற்றியமைக்கப்படுமா என்பதை அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. இ. மதுசூதனன்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, இத்திட்டம் 1988-89 இல் 512 வீடுகள் கட்டித்தருவதற்குத் தீட்டப்பட்டு, மேற்படி வீடுகள் கட்டத் தேர்ந்தெடுக்கப்பட்ட அடிமனை களிமண்ணாக இருக்கிற காரணத்தினால், குறிப்பாக அந்த வீடுகள் சரிவரக் கட்டப்படாத காரணத்தினால், அங்கே இருக்கிற நெசவாளர்களுக்கு அனைத்து வசதிகளும் இல்லாத காரணத்தினால், அந்த வீடுகள் அந்த நெசவாளர்களுக்கு ஒதுக்கீடு செய்யப்படவில்லை. ஏற்கனவே நானும், மாவட்ட ஆட்சித் தலைவரும் சேர்ந்து பரிசீலித்து, குடியிருப்பதற்கு அது உகந்ததல்ல என்பதைக் கருத்திற்கொண்டு மறுபரிசீலனை செய்ய வேண்டுமென்று அம்மாவட்ட ஆட்சித் தலைவரிடம் கூறப்பட்டதற்கு திட்டம் தீட்டப்பட்டுள்ளது. அதைப் பழுதுபார்ப்பதற்கு ரூ.50.60 இலட்சம் தேவைப்படுகிறது என்பதை மாவட்ட ஆட்சித் தலைவர் பரிந்துரை செய்து அனுப்பியிருக்கிறார்கள். அதோடு மட்டுமல்ல, தறிகளை நவீனப்படுத்துவதற்காக ரூ.5,37,600-ம் 5 ஆழ்குழாய்க் கிணறுகள் வெட்டுவதற்கு ரூ.1.25 இலட்சமும் செலவாகிறது என்றும் மாவட்ட ஆட்சித்தலைவர் பரிந்துரை செய்து அனுப்பியிருக்கிறார்கள். அதற்கு ஆவன செய்யப்படும் என்பதை மாண்புமிகு உறுப்பினருக்குத் தெரிவித்துக் கொள்கிறேன்.